## 2 விளம்பரங்களினால் அதிகமான தீமைகளே ஏற்படுகின்றன. வாதித்திடுக.

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் விளம்பரங்களின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விளம்பரம் சந்தைக்கு வந்த ஒரு பொருளை அறிமுகம் செய்து விற்பனை செய்வதற்குத் துணைப்புரிகின்றது. விளம்பரங்களினால் நன்மையை விட ______ ஆணித்தரமாகக் கூறலாம்.

விளம்பரங்களினால் மக்கள் ஒரு பொருளை நம்பி வாங்கி ______ விளம்பரங்களில் காண்பிக்கும் ஒரு பொருள் உண்மையில் அவ்வாறு இல்லாமல் ______ உள்ளது. ஆனாலும், விளம்பர உத்தி அப்பொருள் தரமிக்கது என மிகைப்படுத்தி காட்டுவதால் எளிதாக மக்கள் வசப்படுகிறார்கள். இதனால், மக்கள் அத்தகவல்களை நம்பி ______.

மேலும், விளம்பரங்களினால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் காட்டும் பொழுது மக்கள் அதிகம் ஈர்க்கப்படுகின்றனர். இதனால், தேவையில்லாத பொருட்களை நிறைய வாங்கி பணத்தை ______ ______ தற்பொழுது விளம்பரத்தினால் மின்னியல் வியாபாரமும் பீடுநடை போட்டுக்கொண்டு வருகிறது. முகநூல், புலனம் போன்றவற்றில் விற்பனையாகும் பொருள்களை உடனே வாங்கிக் குவிக்கின்றனர்.

அதோடு, விளம்பரங்களில் அதிகம் ______ தெரிவித்து மக்களை ஏமாற்றுகின்றனர். குறிப்பாக, உடல் எடை குறைப்பு மருந்து, துரித உணவு, அழகு பொருட்கள் போன்றவை உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. இதை நம்பி வாங்கிப் பயன்படுத்தும் மக்கள் உடல் ______ நோய் நொடியுடன் வாழ்கின்றனர்.

தொடர்ந்து, விளம்பரங்களில் ______ சொற்களையும் மொழிக்கலப்பையும் அதிகம் பயன்படுத்துகின்றனர். வானொலியிலும்கூட மலேசியத் தமிழைப் பயன்படுத்தாமல் இந்தியாவின் வட்டார மொழிகளைப் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்கின்றனர். இதனால், ______ ஏற்பட்டு அம்மொழியின் தரம் குறைந்து நாளடையில் அழிந்து விடவும் வாய்ப்பு உண்டு.

இறுதியாக, விளம்பரத்தினால் அதிகம் தீமையே விளைகின்றன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. நம் வாழ்க்கையில் விளம்பரம் அவசியம் என்றாலும் அதிலுள்ள உண்மையை முதலில் அறிந்த பின்னரே அப்பொருளை ______

LIVEWORKSHEETS

| | | |
|---|---|---|
| மொழிச் சிதைவு | ஆரோக்கியம் குறைந்து | பணத்தை இழக்கின்றனர். |
| ஏமாற்றம் அடைகின்றனர். | தீமையே அதிகம் | |
| பேச்சு வழக்குச் | வாங்குவது சிறப்பாகும். | தரம் குறைவாகவே |
| அள்ளி | இறைக்கின்றனர். | தவறான தகவல்களைத் |

LIVEWORKSHEETS